சென்னை–6, தொழிலாளர் உதவி ஆணையர்(பணிக்குழு மற்றும் பொது) அவர்களின்
செயல்முறை ஆணைகள்
முன்னிலை: திரு. பா. மாதவன். எம்.ஏ., பி.எல்.,
சுருக்கம்

பணிக்குழு – தொழிலாளர்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2007–2008 மற்றும் 2012–13–ம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்டு – திரு. எம். பரணிதரன், சென்னை, தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் தட்டச்சராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணியில் சேர்ந்த நாள் முதல் தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

---

ஜி3/6045/13 நாள்: 02.05.2017.

படிக்கப்பட்டது;

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண். 781/PSD- F /2012, நாள். 27.03.2014.
2. சென்னை, தொழிலாளர் ஆணையரின் செயலாணைகள் எண். ஜி3/6045/13–IV, நாள். 06.06.14.

******

ஆணை:

சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, மேலே 1–ல் காணும் தேர்வாணய கடிதம் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, தொழிலாளர் துறை மற்றும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கத்தில் பணிநியமனம் வழங்கும் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களில் மேலே 2–ல் காணும் செயல்முறை ஆணையின் மூலம் திரு. எம். பரணிதரன் என்பவர் தட்டச்சராகப் பணிநியமனம் செய்யப்பட்டு 13.06.2014 முற்பகல் இவ்வலுவகத்தில் தட்டச்சராகப் பணியில் சேர்ந்துள்ளார்.

மேலே 1–வதாக படிக்கப்பட்ட தேர்வாணையக் கடிதத்தில் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தட்டச்சரின் பணியினை அவர் தட்டச்சராகப் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யலாம் எனவும், மேலும், தனியர்களது பணியினை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு தட்டச்சர் பதவியில் வரன்முறை செய்யுமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவுறுத்தியுள்ளது.

"The regularization is subject to the outcome of the WPs relating to Group IV 2007 – 2008 to 2012 – 2013 recruitment pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras"

எனவே, தனியரது பணியினை மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் / மதுரை கிளை சென்னை உயர்நீதிமன்றங்களில் 2007–2008 முதல் 2012–2013–ஆம் ஆண்டில் தொகுதி–IV–ன் தெரிவிற்கெதிராக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டு அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 30 மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் பொது விதி 32–ன் கீழ் தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் 13.06.2014 முதல் பணிவரன்முறை செய்தும் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

இத்தகுதிகாண் பருவ காலத்தில் அரசாணை எண். 130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள். 22.07.08ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தனியர் பணிநியமனம் பெற்ற நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குள் Directorate of Technical Education நடத்தும் Certificate Course in Computer on Office Automation என்ற பயிற்சித் தேர்வில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே அவரது தகுதிகாண் பருவத்தை பூர்த்தி செய்ய இயலும் என்பதால் தனியர் அத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் உத்திரவிடப்படுகிறது.

மேலும், தனியர் உதவியாளராகப் பதவி உயர்வு பெறுவதற்கு, தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு, சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு மற்றும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் துறை பகுதி அ மற்றும் ஆ ஆகிய தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்./– பா. மாதவன்
தொழிலாளர் உதவி ஆணையர்
(பணிக்குழு மற்றும் பொது)

பெறுநர்

திரு. எம். பரணிதரன்,
முன்னாள் தட்டச்சர்,
தொழிலாளர் ஆணையர் அலுவலகம், சென்னை.

நகல்

1. இவ்வலுவலக ஜி4 இருக்கை.
2. பணிப்பதிவேடு/உதிரி.

// அனுப்பப்படுகிறது //

2/5/17

தொழிலாளர் உதவி ஆணையருக்காக
(பணிக்குழு மற்றும் பொது)

02/05/17